தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.

**ஆணை நாள்.12.05.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10689/B/2023**

திரு. அ. ஜெயக்குமார் ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கும்மிடிப்பூண்டி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்-601201. ... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின்மீது இவ்வாணையத்தால் (12.05.2026) இன்று நடத்தப்பட்ட நேரடி விசாரணைக்கு மனுதாரர் திரு. அ. ஜெயக்குமார் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொது தகவல் அலுவலர், திருமதி.கனகவள்ளி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கும்மிடிப்பூண்டி அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 12.06.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)-ன்கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு (12.05.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மனுவானது மனுதாரர் 06.02.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தகவல்கள் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனுவாகும்.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் பொது அதிகார அமைப்பால் போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லையென தெரிவித்து, அதனை பெற்றுத் தரும்படி ஆணையத்திடம் கேட்டுக்கொண்டார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு 23.12.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியதாக தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தார்.

5. இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

**மனுதாரர் பொது தகவல் அலுவலரை நேரில் சந்தித்து இறந்தவர்களின் பெயர், தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்களை அளிக்கும் பட்சத்தில் பொது தகவல்**

**அலுவலர் மனுதாரருக்கு தேவைப்படும் தகவல்களை தருவதாக உத்தரவாதம் அளித்ததன் அடிப்படையிலும் மனுதாரரும் அதனை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையிலும் இந்த மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 10689/B/2023</u>**
**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
   தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   கும்மிடிப்பூண்டி வட்டம்,
   திருவள்ளூர் மாவட்டம்-601201.

2. மேல்முறையீட்டாளர்,
   திரு. அ. ஜெயக்குமார்,
   எண்.36, முக்கரம்பாக்கம் கிராமம்,
   மேட்டுக் காலனி,
   கும்மிடிப்பூண்டி வட்டம்,
   திருவள்ளூர் மாவட்டம்-601102.
   செல்.8438243851.

Copy to: File. GP PC
13,05.26